மட்டுமல்ல, பம்பாய், பெங்களூர், ஆமதாபாத்,பரோடா போன்ற இடங்களில் இருக்கின்ற பால் பண்ணைகளிலும் இதே அளவு கொழுப்புச் சத்துள்ள பால்தான் விநியோகம் செய்யப்படுகிறது. இந்த அளவு கொழுப்புச் சத்து நமக்குப் போதும் என்று விஞ்ஞான ரீதியில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஆவுடையார் கோயில், தஞ்சாவூர்

*660. வின—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை ஆவுடையார் கோயிலைப் புதுப்பிக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) மேற்படி திருக்கோயிலின் திருப்பணிக்காக சுமார் $10\frac{1}{2}$ லட்சம் ரூபாய்க்கு மதிப்பீடுகள் ஒப்புதல் அளிக்கப்பட்டு அதில் $2\frac{1}{2}$ லட்சம் ரூபாய் மதிப்புள்ள வேலைகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டுவிட்டன. மீதியுள்ள வேலைகள் துவங்கப்பட்டு படிப்படியாக முன்னேறி வருகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஆவுடையார் கோயில் பழம்பெரும் சிறப்புடையது. அந்தக் கோயிலை புதுப்பிப்பதை நான் வரவேற்கிறேன். புதுப்பிப்பதற்கு வெளிநாடுகளிலிருந்து உதவி கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படிக் கொடுக்கப்பட்டிருந்தால் எங்கே இருந்து உதவி பெறப்பட்டது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, வெளிநாட்டு உதவி எதுவும் கிடையாது. அந்தக் கோயில் சார்பில் ஒரு திருப்பணிக் குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் சார்பில் தான் நிதி பொதுமக்களிடமிருந்தும், அரசாங்கத்திடமிருந்தும் பெறப்பட்டு, புதுப்பித்தல் பணி செய்யப்பட்டு வருகிறது.

Training for science teachers

*641 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that the State Government propose to retrain B.T. Science Teachers for handling the new upgraded syllabus to be introduced from 1975-76; and

(*b*) if so, the details thereof?

1975 ஏப்ரல் 11]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; (அ) ஆம்.

(இ)ஒரு அறிக்கை @ சட்டமன்றப்பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்தியா பூராவும் ஒரே சிலபஸ் சிஸ்டம் என்ற முறையில் வைத்திருக்கிறார்கள் ; அது நல்ல முறை என்றும் சொல்கிறார்கள். நம்முடைய சர்க்கார் சிலபஸ்ஸில் மாற்றம் செய்வதாகச் சொன்னார்கள். அப்படி மாற்றம் செய்வது, இந்தியா பூராவுக்கும் இருக்கிற அந்த சிலபஸை ஒட்டி இருக்கிறதா அல்லது தனிப்பட்ட முறையில் வேறுவிதமாக இருக்கிறதா ? எந்த அளவுக்குத் தரத்தை உயர்த்த சர்க்கார் திட்டம் வைத்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பள்ளிக்கூடங்களைப் பொறுத்தவரையில் இந்தியா முழுவதற்கும் ஒரேவிதமான பாடத் திட்டம் வைப்பது என்பது பொருந்தாது. ஏனென்றால் மாநிலத்திற்கு மாநிலம், மாவட்டத்திற்கு மாவட்டம் மாற்றம் இருக்கிறது. அதைப்பொறுத்துத்தான் பாடத் திட்டம் அமையவேண்டும். ஆனால் ‘என். சி. ஆர். டி. -யில் மாணவர்களுக்கு கணிதவியலிலும், அறிவியலிலும் எந்தெந்த வகையில் பயிற்சி அளிக்க வேண்டுமென்று ஒரு மாதிரித் திட்டம் வைத்திருக்கிறார்கள். அதை அடிப்படையாகக் கொண்டு புதிய கணித இயலும், அறிவியல் பாடமும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே மேல் வகுப்புகளில் மட்டும் அறிவியல் பாடம் சொல்லிக்கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது உயர் தொடக்கப் பள்ளியிலிருந்து அறிவியல் பாடம் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. அகில இந்திய அடிப்படையில் வகுத்துத் தந்த கொள்கையின் அடிப்படையில்தான் நம்முடைய மாநிலத்தில் இந்தப் புதிய முறை அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : சார், இப்போது ‘ செட்-தியரி ’ என்று கணிதத்திலே புகுத்தியிருப்பதாகச் சொல்கிறார்கள். ஏற்கெனவே அமெரிக்காவில் இந்த ‘ செட்-தியரி ’ புகுத்தப்பட்டு, 20 வருஷமாக நடைமுறைப்படுத்திய பிறகு இது பிரயோஜனம் இல்லை என்று தள்ளிவிட்டார்கள். கடைக்குப் போய் கத்தரிக்காய் வாங்குவதற்குக் கூட பயன்படாது என்று தூக்கிப்போட்டு விட்டார்கள். அந்த எக்ஸ். ஒய். இசட். முறையில் இருக்கிற ‘ செட்-தியரியை’, அமெரிக்காவில் பயன்படாது என்று கைவிடப்பட்ட தியரியை நாம் இப்போது புகுத்துவதினால் என்ன பிரயோஜனம் இருக்கிறது? ஆகவே, மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய பாடத்திட்டங்களைக் கொண்டுவருவார்களா ?

@ 554, 555-ம் பக்கங்களில் இணைப்பு-I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தப் பாடத் திட்டம் நுழைவது சரியா தவரு என்று சொல்கிற ஆற்றல் நமக்கில்லை. அறிவார்ந்த, கற்றறிந்த வல்லுநர் குழு ஆராய்ந்து, அகில இந்திய அடிப்படையில் செய்யப்பட்ட சிபாரிசை அடிப்படையாக வைத்து, இந்த மாநிலத்தில் இப் பணியை ஏற்றிருக்கிற வல்லுநர்கள் மட்டுமே இத்தகைய கருத்துக் களை உருவாக்கித் தருகிருர்கள். அதைத்தான் நாம் செயல் படுத்துகிறேம். ஆகவே, பயன்படுகின்ற கல்வியைப் புகுத்த வேண்டுமென்ற நோக்கத்தில்தான் இந்தப் பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இதில் பயன் இல்லை என்று சொல்வ தற்கில்லை. ஏற்கெனவே இருந்த குறைபாடுகள் இதனுல் நீக்கப் பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புகுமுக வகுப்பில் தமிழில் படிக்கும் மாணவர்கள்

*642 வினு—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பி.யு. சி. வகுப்பில் தமிழைப் பாடமொழியாகப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில் குறைந்துள்ளதா ?

(இ) அப்படியானுல், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 1972-73 ஆம் ஆண்டைவிட 1973-74-ல் புகுமுக வகுப்பில் தமிழைப் பாடமொழியாகப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந் துள்ளது. ஆனுல், 1974-75-ல் இது 1973-74 ஆம் ஆண்டைவிட உயர்ந்துள்ளது.

(இ) 1973-74-ல் ஏற்பட்ட இந்தக் குறைவு தமிழ் போதனு மொழி வகுப்பில் மட்டுமல்லாமல் பொதுவாக பட்டப்படிப்பு வகுப்பிலும், ஆங்கில போதனு மொழி வகுப்பிலும் ஏற்பட்டுள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : சார், தமிழைப் பாடமொழியாகக் கொண்டு படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டைவிட அதிகமாக இருப்பதாகச் சொன்னுர்கள். அவர் களுக்கு விசேஷ சலுகை எல்லாம் அளிக்கப்படுவதாகச் சொல்லப் பட்டிருந்தது. அந்தச் சலுகைகள் எல்லாம் முறையாக வழங்கப் படுகின்றனவா? இன்னும் அதிகமான சலுகை அளிக்க புதிய திட் டம் ஏதாவது இருக்கிறதா ?